எடுக்கிறார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூரில் சிறைச்சாலை இருக்கிறது. அந்த மாவட்டத்திலே இடம் கிடைத்தால், அது எந்த இடம், அங்குள்ள தண்ணீர் வசதி, இன்னும் பிற வசதிகளையெல்லாம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதியனுப்பினால் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலையில் கைதிகளை விவசாயத்தில் ஈடுபடுத்துவதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு உற்பத்தியில் பங்கு ஏதாவது கொடுக்கப்படுகிறதா அல்லது நாள் ஊதியம் அவர்களுக்குத் தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு பங்கு கொடுப்பதாக இல்லை. அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும்—ரெமிஷன்—விடுதலையாவதற்கு உதவும்படியாகக் கூடிய வகையில் கழிவு நாட்கள் அதிகமாக்கி, சீக்கிரம் விடுதலையடைய வழிவகை கிடைக்கும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட குற்றம் புரிந்தவர்கள், கொலைக்குற்றம் புரிந்தவர்கள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வைக்கப்படுகின்றார்களா அல்லது மைனர் கிரிமினல் குற்றம் புரிந்தவர்கள் மட்டும் வைக்கப்படுகின்றார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான் கொஞ்சநேரத்திற்கு முன்னாலே விளக்கம் சொன்னேன். மைனர் கிரிமினல் குற்றம் புரிந்தவர்களைப் பொறுத்து, அவர்களுக்குத் தனிச் சிறைச்சாலை இருக்கிறது. நீண்டநாள் தண்டனை பெற்றவர்கள், சிறையில் நல்லமுறையில் நடந்துகொள்பவர்கள், நல்லமுறையில் நடந்துகொள்வார்கள் என்கிற நம்பிக்கையுள்ளவர்களை திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வேலைக்கு அனுப்பலாம் என்று இருக்கிறது.

அகரம் கிராமத்திற்கருகே பாலம்

*292 வின.—**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர் தொகுதியைச் சார்ந்த மாதனூரிலிருந்து ஒடுகத்தூர் செல்லும் பாதையின் இடையில் அகரம் கிராமத்திற்கருகில் ஆற்றுக்கு குறுக்கே மேம்பாலம் கட்டும் வேலை தற்சமயம் என்ன நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு இந்த வேலைக்கு இன்னும் அனுமதி அளிக்கவில்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த மேம்பாலம் கட்டுவதற்காக கரும்பு செஸ் நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படிருப்பதாக எனக்குக் கூட தகவல் வந்திருக்கிறது. அந்த

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1971 ஜூலை 17]

மேம்பாலத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டது என்று சொல்லப் படுகிறதே, அந்த மேம்பாலத்தைக் கட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, செஸ் நிதி ஒதுக்கப்பட்டதாக எனக்கு விவரம் இல்லை. அப்படி நிதி ஒதுக்கப்பட்டிருந்தால் இந்த ஆண்டே வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

.பொதுப் பணித்துறையின் கீழ் உள்ள புறம்போக்கு நிலங்கள்

*293. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித்துறையில் உள்ள புறம்போக்கு நஞ்சை புஞ்சை நிலங்களைச் சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு நிரந்தரமாக ஜாரி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் உள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை, பொதுப்பணித் துறையின் விரிவான திட்டங்களுக்குப் போக எஞ்சியுள்ள நிலங்களை சாகுபடி செய்துவரும் விவசாயிகளுக்கே ஜாரி செய்து ஒப்படைசெய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தேவையில்லாத புறம்போக்கு நிலங்கள் விவசாயிகளுக்கு விவசாயத்திற்காக அளிக்கப்படுகிறது. இப்போது உரிமம் செய்து கொடுக்கும் வேலை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலே உள்ள ரோடு ஓரங்களிலே உள்ள ஏராளமான ஏழைகள் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களையெல்லாம் அவர்களுக்குப் பட்டாச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரோடு ஓரங்களிலே போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் பொது மக்களுடைய ஆட்சேபணையில்லாமல் இருக்குமானால் ஏழை மக்களுக்குப் பட்டாச் செய்து கொடுப்பதற்கு ரெவின்யூ தரப்புக்கு அது மாற்றித் தரப்பட்டு ரெவின்யூ இலாக்கா மூலமாக பட்டா செய்து கொடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்டிற்குச் சொந்தமான ஏரி, புறம்போக்கு நிலங்கள் விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. நிலங்களை